THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Friday, the 28th March 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Vellore Beedi Workers' Strike.

* 261 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether 20,000 workers went on strike in June and July 1968 due to the strike by the beedi workers at Vellore;

(*b*) whether there was any disturbance during this strike; and

(*c*) if so, the number of persons who were injured?

வேலூர் பீடி தொழிலாளிர்கள் வேலை நிறுத்தம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) வேலூரில் பீடி தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாக 1968 ஜூன், ஜூலையில் 20 ஆயிரம் பேர் வேலை நிறுத்தம் செய் தனரா ?

(இ) இவ்வேலை நிறுத்தத்தின்போது கலவரம் ஏற்பட்டதா ?

(உ) ஆமெனில், எத்தனை பேர் காயமுற்றனர் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ஆம். பீடித் தொழிலாளர்கள் 1—7—1968 அன்று நடத்திய ஊர்வலத்தில் சில சிறு வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதனால் காவலர்கள் லேசாகத் தடியடி நடத்தினர்.

(உ) 15 பேர்களுக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டன.

Udayarpalayam taluk.

* 262. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the students went on strike objecting to the dissolution of the Udayarpalayam taluk; and

(*b*) the name of the taluk in which it has been merged?

[28th March 1969

உடையார் பாளையம் தாலுகா.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உடையார்பாளையம் தாலுகாவைக் கலைத்துவிட்டதை ஆட்சேபித்து பள்ளி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) அந்த தாலுகா எந்த தாலுகாவுடன் இணைக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில், உடையார் பாளையம் முதன்மை வட்டமும் அரியலூர் துணை வட்டமும் சேர்ந்துள்ளன. உடையார்பாளையம் முதன்மை வட்டத்திற்குத் தலைமையிடம் ஜெயங்கொண்டமாகும். அரியலூர் துணை வட்டத்திற்குத் தலைமையிடம் அரியலூராகும். 1—11—67 முதல் (ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு செயலுக்குக் கொண்டுவரப்பட்டதன்மேல்) ரயத்துவாரி கிராமங்களாக எடுத்துக்கொள்ளப்பட்ட, உடையார்பாளையம் வட்டம் முழுவதிலும் பரவியிருந்த 54 தொகுதிக் கிராமங்கள் அரியலூர் துணை வட்டத்துடன் இணைக்கப்பட்டு, அது ஒரு புதிய வட்டமாக அமைக்கப்பட்டது. இந்தப் புதிய வட்டத்தின் தலைமையிடம் அரியலூர். உடையார்பாளையம் வட்டத்தின் எஞ்சிய பகுதி ஜெயங்கொண்டம் வட்டமாக அமைக்கப்பட்டது. இதன் தலைமையிடம் ஜெயங்கொண்டம். இதனையடுத்து அரசு ஜெயங்கொண்டம் வட்டத்திற்கு உடையார்பாளையம் வட்டமென்று மீண்டும் பெயரிடுவதன் மூலம் முதற்கண் இருந்த உடையார்பாளையம் வட்டம் அதே பெயரில் வைத்துக் கொள்ளப்படுமென்றும், ஆனால் அந்த வட்டத்திற்கு ஜெயங்கொண்டம் முன்போலவே வட்டத் தலைமையிடமாகத் தொடர்ந்து இருந்து வருமென்றும் ஆணையிட்டது.

Chief Minister's Relief Fund.

* 263 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount at credit in Chief Minister's Relief Fund in the year 1967-68;

(*b*) the expenditure incurred during the financial year 1967-68 , and

(*c*) the details thereof?

முதலமைச்சர் நிதி.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1967-68-ல் முதலமைச்சர் மாநில உதவி நிதியென எவ்வளவு (**Chief Minister's Relief Fund**) நிதி உள்ளது ?

(இ) 1967-68-ஆம் நிதி ஆண்டில், அதில் செலவானது எவ்வளவு ?

(உ) அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 1967-68-ஆம் ஆண்டில் (31—3—1968 அன்றுவரை) இந்நிதியில் இருந்த தொகை ரூபாய் 3 94,437-76 ஆகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS